10

# கர்த்தருடைய கடைசி அன்புக் கடிதங்கள்

## [2; 3]

*புதிய ஏற்பாடு கடிதங்களால் நிறைந்துள்ளது. புதிய ஏற்பாட்டின் இருபத்தியேழு புத்தகங்களில் இருபத்தியோரு புத்தகங்கள், சபைகளுக்கும் மற்றும் தனிநபர்களுக்கும் எழுதப்பட்ட கடிதங்களாக (நிருபங்களாக) உள்ளன. இவை யாவும், கர்த்தர் தமது மக்கள்மீது கொண்டுள்ள அன்பு மற்றும் அக்கறை ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக உள்ளன. அவர் எழுதிய கடைசிக் கடிதங்கள் நாம் படித்துக் கொண்டுள்ள (வெளிப்படுத்தின விசேஷம் என்னும்) புத்தகத்தில் உள்ளன.[1] அதிகாரம் 2 மற்றும் 3ல் நாம், ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைக்குழுமங்களுக்கு இயேசுவிடம் இருந்து வந்த ஏழு கடிதங்களைக் கண்டறிகின்றோம்.[2]*

*இந்தக் கடிதங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர். அதிகாரம் 1ல் நாம், இயேசுவின் மகிமையைக் கண்டவுடனே, அதிகாரங்கள் 4, 5ல் பரலோகத்தின் மாட்சிமையைக் காண நாம் தயாராகின்றோம். அதற்குப் பதிலாக நாம், அதிகாரம் 2, 3ல், சபைகளின் குற்றம் பற்றி வாசிக்கின்றோம். இந்தக் கடிதங்கள் இந்தப் புத்தகத்தில் பிற்பாடு சேர்க்கப்பட்டன என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர், ஆனால் இவைகள் தொடக்கத்தில் இருந்தே வெளிப்படுத்தின விசேஷத்தின் பாகமாய் இருந்தன என்பதைக் கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரம் சுட்டிக்காண்பிக்கிறது.*


*இந்தக் கடிதங்கள் உள்ளடக்கப்பட்டது ஏன்? இவைகள் முதல் நூற்றாண்டில் இருந்த சபைக்குழுமங்களுக்குக் கொண்டிருந்த மதிப்பு என்ன? மற்றும் இவைகள் இன்றைய நாட்களில் கொண்டுள்ள மதிப்பு என்ன? இந்தப்பாடத்தில் நாம், இவ்வேழு கடிதங்களையும் விரிவாகக் கண்ணோக்குவதற்கு நம்மைத் தயார் செய்து கொள்ளுகையில், மேற்கண்ட மற்றும் பிற கேள்விகளுக்குப் பதில் அளிக்க விரும்புகின்றோம்.*

### விளக்கப்பட்ட நோக்கம்

இந்தக் கடிதங்கள் பல நோக்கங்களை நிறைவேற்றுகின்றன. முதலாவது, இவைகள் இந்தப் புத்தகத்தை நடைமுறைக்கு உரியதாக்க உதவுகின்றன. இந்தக் கடிதங்கள் இன்றி, 1:3ல் "கேட்பதற்கு" மற்றும்

‘‘கைக்கொள்வதற்கு’’ விடுக்கப்பட்ட அறைகூவலானது, எழுதப்பட்ட விஷயங்களை மிகவும் குறைவான அர்த்தம் உடையவைகளாக்கும், ஏனென்றால், அதிகாரம் 2 மற்றும் 3 ஆகியவை இந்தப் புத்தகத்தின் எஞ்சிய பகுதி முழுமையிலும் உள்ளதைக் காட்டிலும் அதிகமான நேரடிக் கட்டளைகளைக் கொண்டுள்ளன.

இரண்டாவது, இந்தக் கடிதங்கள், மகிமையுள்ள கர்த்தரின் தரிசனத்திலிருந்து அதிகாரங்கள் 4முதல் 22வரை உள்ள தரிசனங்களுக்கு ஒரு மாறுதலை அளிக்கின்றன. சபைகளுக்கு இயேசுவின் செய்தியானது ஒரு மூவழிக் கவனக்குவிப்பைக் கொண்டுள்ளன:




(1) இவைகள் அதிகாரம் 1ஐப் பின்னோக்கித் திரும்பிக் கண்ணோக்கின. ஒவ்வொரு கடிதத்தின் தொடக்கத்திலும், கிறிஸ்துவைப் பற்றிய விவரிப்பு ஒன்றை நாம் பெற்றுள்ளோம், இது பொதுவாக (இதற்கு முன் கூறப்பட்ட) தரிசனத்திலிருந்து எடுக்கப்பட்டதாக உள்ளது.[3] (2) இவைகள் யோவானின் நாட்களில் இருந்த நிலைமைகளைச் சுற்றிலும் கண்ணோக்கின. ஒவ்வொரு கடிதத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியிலும் நாம், காலங்களுக்கான உணர்வைப் பெறுவோம், ஏனெனில் இயேசு, ஒவ்வொரு சபைக்குழுமத்தின் தனிப்பட்ட அறைகூவலையும் எடுத்துரைத்தார். (3) இவைகள் 4முதல் 22வரையுள்ள அதிகாரங்களை முன்னெதிர் பார்த்துக் கண்ணோக்கின. இந்தக் கடிதங்களின் முடிவுரைகள், இந்தப் புத்தகத்தின் எஞ்சியுள்ள பகுதியின் ஆய்வுப்பொருளை முன்னெதிர்பார்க்கும் வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளன.[4] எடுத்துக்காட்டாக, எபேசுவில் இருந்த சபைக்கான கடிதம், ஜீவவிருட்சத்திலிருந்து புசிப்பதைப் பற்றிய ஒரு வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது (2:7), மற்றும் கடைசி அதிகாரத்தில் (22:2) நாம், ஜீவவிருட்சத்தைப் பற்றி வாசிப்போம். சர்தையில் “ஜெயம் கொள்பவர்கள்” ‘‘வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதாக’’ வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டனர் (3:5); அதிகாரம் 7ல் நாம், “திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் (நிற்பது)” பற்றி வாசிப்போம் (வசனம் 9).

மிகவும் முக்கியமாக, இந்தக் கடிதங்கள், இப்புத்தகத்தில் கிறிஸ்துவின் முற்றான நோக்கத்தின் நிறைவேற்றத்திற்கு இன்றியமையாதவைகளாக இருந்தன: அவர், ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கவும் அவர்களை இன்னும் பெரிய உபத்திரவத்திற்குத் தயார்ப்படுத்தவும்

விரும்பினார்; அவர், நன்மையானது கடைசியில் வெற்றிபெறும் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்த விரும்பினார். அதை அவர் செய்வதற்கு முன்பு, ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கப்பட வேண்டியிருந்தது: அணுகிக்கொண்டிருந்த புயலுக்கு *அவர்கள் தயாராக இருந்தார்களா?* கலகம் செய்கின்ற, கீழ்ப்படியாமையுள்ள மக்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க இயலாது.[5] கர்த்தர் சபைகளுக்கு உற்சாகம் அளிப்பதற்கு முன்பு, அவர்களுக்கு அவர் பரீட்சையைக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. பின்பு அவர்களின் பலங்களில் அவர்களை அவர் உறுதிப்படுத்தி, அவர்களின் பலவீனங்களில் அவர்களைத் திருத்தி, அவர்களின் பயங்களில் அவர்களுக்கு ஆறுதல் அளிக்க முடியும்.

ஆகையால், சபைக்குழுமங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த போராட்டத்திற்கு அவர்களைத் *தயார் செய்வித்தல்* என்பதே இந்தக் கடிதங்களின் அடிப்படை நோக்கமாக இருந்தது. இந்தக் கடிதங்களை நாம் படித்து முடிப்பதற்கு முன்பு, இவைகள் நாம் எதிர்கொள்ளுகின்ற ஆவிக்குரிய யுத்தங்களுக்கு நம்மை நாம் சிறப்பாகத் தயாரித்துக்கொள்ளவும் உதவக்கூடுமா என்று நாம் காண்போம்.

## வெளியாக்கப்பட்ட வடிவமைப்பு

இந்தக் கடிதங்களில் ஒரு மாதிரியை/வடிவமைப்பைக் கண்டுபிடித்தல் என்பது கடினமானதல்ல. இவை யாவும் ஒரே விதமாகவே தொடங்குகின்றன, இவைகளின் முடிவுக்கு அருகில், கேள்விப்படுதல் பற்றிய ஒரேவிதமான வார்த்தைகள் எப்போதும் பயன்படுத்தப்படுகின்றன, மற்றும் இவை யாவும், "ஜெயம்கொள்கின்றவர்களுக்கு" வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளன. இருப்பினும், இந்த வடிவமைப்பின் முழு விரிவளவும் உடனடியாகத் தெளிவாய் இராதிருக்கலாம். இந்தக் கடிதங்களை ஒப்பிடுவதில் உங்களுக்கு உதவுவதற்கு, நீங்கள் நிரப்பும்படிக்கு கீழே ஒரு வரைவட்டவணை தரப்படுகிறது. இதை நீங்கள் கவனமாக ஆய்வு செய்து, ஏற்ற இடத்தில் ஒவ்வொரு கூறும் (வாழ்த்து, இயேசுவைப் பற்றிய விவரிப்பு, … முதலியன) காணப்படும் அதிகாரம் மற்றும் வசனத்தை ஏற்புடைய இடத்தில் எழுதவும்.

ஒருசில விதிவிலக்குகளுடன், ஒவ்வொரு கடிதமும் ஏழு கூறுகளைக் கொண்டுள்ளது: (1) வாழ்த்துதல், (2) இயேசுவைப் பற்றிய விவரிப்பு, (3) முழுசபையையும் பற்றிய பாராட்டுரை, (4) முழுசபையையும் பற்றிய கண்டனம், (5) எச்சரிக்கை மற்றும் அச்சுறுத்தல், (6) புத்திகூறுதல் மற்றும் (7) ஒரு வாக்குத்தத்தம்.[6]

*வாழ்த்துதல்* என்பது ஒவ்வொரு கடிதத்திலும் அடிப்படையில் ஒரேமாதிரியாக உள்ளது ("[குறிப்பிட்ட நகரத்தின்] சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்"), மற்றும் *புத்திமதியும்* ("ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்") அவ்வாறே உள்ளது. நாம் கண்டுள்ளபடி, இவற்றில் இரண்டு கூறுகள் இந்தப் புத்தகத்தின் எஞ்சியபகுதியுடன் பிணைக்கப்பட்டுள்ளன: பெரும்பாலான

கடிதங்களில் இயேசுவைப் பற்றிய விவரிப்பு, அதிகாரம் 1ல் உள்ள தரிசனத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது, மற்றும் வாக்குத்தத்தங்கள் இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் விரிவாக்கப் பட்டுள்ளன. இவ்விதமாக, கடிதங்களின் (3), (4), மற்றும் (5)ம் பகுதிகளில் பிரதானமான வேறுபாடுகள் உள்ளன. வரைவட்டவணையில், பாராட்டப்படாத இரு சபைகளை விசேஷமாகக் கவனியுங்கள், இரு சபைகள் கண்டனம் பண்ணப்படாது இருக்கையில் - அதனால் அவைகளுக்கு எச்சரிக்கையும் எதுவும் இல்லை. நாம் காணப்போகின்றபடி, இந்த வேறுபாடுகள் குறிப்பிடத்தகுந்தவை களாக உள்ளன.

வடிவமைப்புப் பற்றி இன்னும் ஒரு பண்பைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது: முதல் மூன்று கடிதங்களில், புத்திமதியானது வாக்குத்தத் தத்திற்கு முன்னதாக இருக்கையில், மற்ற நான்கு கடிதங்களில் வாக்குத் தத்தம் புத்திமதிக்கு முன்னதாக உள்ளது. நாம் முன்பே குறிப்பிட்டபடி, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஏழுகளின் பட்டியல்கள் பெரும்பாலும், மூன்று மற்றும் நான்கு (அல்லது நான்கு மற்றும் மூன்று) என்ற வகையில் குழுக்களாக்கப் பட்டுள்ளன. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றபடி, தொடர்பற்ற காட்சி களின் குளறுபடியாக இருப்பதில்லை; இதைப் பற்றிய முறையற்ற விஷயம் என்று எதுவும் இருப்பதில்லை.

ஏழு கடிதங்களைப் பற்றிய நமது படிப்பிலிருந்து நீங்கள், அதிகபட்சமான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பினால், முதலில் நீங்கள் மேலுள்ள வரைவட்டவணையில் தக்க வசனக்குறிப்புகளை இட்டு நிரப்ப வேண்டும். இதை நீங்கள் தொடங்க உங்களுக்கு உதவுவதற்கு, “இருதயக் கோளாறுடன் இருந்த சபை” என்ற அடுத்த பாடத்தின் பிரதான (துணைத்)தலைப்புகளுக்குப் பின்புள்ள வேதவசனக் குறிப்புகளைக் கண்ணோக்குங்கள். இவ்வசனக் குறிப்புகளையே நீங்கள், ‘‘எபேசு’’ என்பதன் கீழுள்ள கட்டங்களில் எழுதவேண்டும். வசனங்களை நீங்கள் எழுதுகையில், வரிசைமுறையில் உள்ள மாறுபாட்டைக் கவனியுங்கள்: எபேசு சபையைப் பாராட்டுதல் என்பது வசனங்கள் 2, 3ல் தொடங்குகிறது, ஆனால் அது வசனம் 6ல் முடிகிறது. இதைப்போன்ற சிறுசிறு வேறுபாடு களைக் கடிதங்களில் நீங்கள் அவ்வப்போது காண்பீர்கள்.

‘‘எபேசு’’ என்பதற்குக் கீழுள்ள கட்டங்களை நீங்கள் நிறைவு செய்தபின்பு, வரைவட்டவணையின் எஞ்சிய கட்டங்களை அனேகமாக நீங்களாகவே நிரப்பக்கூடும். உங்களுக்கு அதிகம் உதவி தேவைப்பட்டால், தியத்தீரா சபை பற்றிய (“யேசபேலை உறுப்பினராகக் கொண்டிருந்த சபை” என்ற) பாடத்தைக் கண்ணோக்கவும். உங்கள் சிந்தையில் ஏழு பகுதிப் பிரிவைக் கொண்டுவர உதவும்படிக்கு, அந்தப் பாடத்திலும் இந்த வடிவமைப்பைத் தக்கவைத்துள்ளேன்.

## ஆய்வுசெய்யப்பட்ட கருத்துக்கள்

இந்த வரைவட்டவணையை நீங்களாகவே நிரப்புவதன்மூலம், இந்தக்

*கடிதங்களைப் பற்றி நாம் படிக்கும் முன்பு இவைகளைப் பற்றிய முழுமையான உணர்வை நீங்கள் பெறுவீர்கள். (உங்கள் பதில்களை நீங்கள் இந்தப் புத்தகத்தின் ... வேறொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு சரிபார்த்துக் கொள்ள முடியும்.) இயேசு சபைகளின் மத்தியில் நடந்து, அவற்றை ஆய்வு செய்து, வரவிருந்த கொடிய தண்டனைக்கு அவற்றைத் தயார்ப்படுத்திய காட்சியைப் பார்வையில் இருந்து இழந்துபோய் விடாதீர்கள். அவர்களுக்கு என்ன பாடங்கள் தேவைப்பட்டன என்று நீங்கள் யூகிக்கின்றீர்கள்? ஹெரால்டு ஹேசெலிப் அவர்கள் பின்வரும் கருத்தை ஏற்படுத்தினார்:*

> ஒவ்வொரு கடிதமும் தனிச்சிறந்த குறிப்பை - முழுச் செய்தியையும் தொகுத்துரைக்கின்ற, கிளர்ச்சியூட்டும் ஒரே ஒரு வார்த்தை அல்லது அறைகூவல் விடும் சொற்றொடரை - கொண்டிருந்தன. மாறுபட்ட இந்தக் குறிப்புகளை நாம் ஒன்றிணைத்தால், இன்றைய நாட்களில் கிறிஸ்து தமது சபை எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் என்பதற்கான ஏழு கருத்துக்கள் கொண்ட விவரிப்பு ஒன்றை நாம் பெறுவோம்.[7]

*பின்பு, ஹேசெலிப் அவர்கள் ஒவ்வொரு சபைக்குமான திறவுகோல் வார்த்தைகளை முன்மொழிந்தார்: எபேசுவில் இருந்த சபையானது தனது ஆதி அன்புக்குத் திரும்ப வேண்டியிருந்தது (2:4); சிமிர்னாவில் இருந்த சபையானது உபத்திரவத்திற்குத் தயாராக வேண்டியிருந்தது (2:10); பெர்கமுவில் இருந்த சபையானது சத்தியத்திற்காக நிலைநிற்க வேண்டியிருந்தது (2:14, 15); தியத்தீராவில் இருந்த சபைக்கு மாபெரும் பரிசுத்ததன்மை தேவைப்பட்டது (2:20); சர்தையில் இருந்த சபையானது உண்மைத்தன்மையில் குறைவுபட்டிருந்தது (3:1); பிலதெல்பியாவில் இருந்த சபையானது சுவிசேஷ ஊழியத்திற்கான வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்பட்டது (3:8அ); மற்றும் லவோதிக்கேயாவில் இருந்த சபையானது ஒப்புக்கொடுத்தலில் குறைவுபட்டதற்காகக் கண்டனம் பண்ணப்பட்டது (3:15).[8] ஹேசெலிப் அவர்கள், "அன்பு, உபத்திரவம், சத்தியம், பரிசுத்தம், உண்மைத்தன்மை, சுவிசேஷ ஊழியம் மற்றும் ஒப்புக்கொடுத்தல் என்ற இந்த ஏழு பண்புகளையும் ஒரு சபைக்குழுமத்தில் நம்மால் ஒன்றிணைக்கக் கூடும் என்றால், நாம் தேவனுடைய மக்களின் மிக உயர்வான சமூகத்தைக் கொண்டிருப்போம்" என்று முடிவுசெய்தார்.[9]*

*கடிதங்களை நாம் படிக்கையில், இன்றைய நாட்களில் சபைக்கான நடைமுறைப் போதனையில் நீங்கள் மனம் ஈர்க்கப்படுவீர்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் காணப்படும் பாடங்கள் நமக்கு அவசியமாக உள்ளன.*

## முடிவுரை

*ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்களின் நடைபாதையில்*

*இடர்ப்பாடு கிடந்தது. நமக்கும் இடர்ப்பாடு காத்துள்ளது. இது அவர்கள் அனுபவித்த அதே வகையான இடர்ப்பாடாக இருக்கலாம் அல்லது வேறு வகையானதாக இருக்கலாம், ஆனால் இது நமது ஆத்துமாக்களைச் சோதிக்கும். அந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் வாழ்வின் புயலுக்குத் தயாராயிருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்; இவ்விதமாக அவர்களின் பலங்களை மேம்படுத்தும்படிக்கும் அவர்களின் பலவீனங்களைத் திருத்தும்படிக்கும் அவர்களை ஆய்வு/பரிசீலனை செய்தார். கலகம் செய்கின்ற, கீழ்ப்படிதல் அற்ற மக்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க இயலாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.*

*என்ன வந்தாலும் நாம் அதற்குத் தயாராக இருக்கும்படிக்கு கர்த்தர் விரும்புகின்றார். ஆயத்தம் என்பது இன்னமும் மூன்று காரணிகளைச் சார்ந்துள்ளது: நமது பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றைப் பற்றிய நேர்மையான மதிப்பீடு, நமது பலங்களை மேம்படுத்துதல் மற்றும் நமது பலவீனங்களைத் திருத்திக்கொள்ளுதல். சுய மதிப்பீட்டிற்கு உங்களுக்கு உதவுவதற்கு, நீங்கள் மதிக்கும் மற்றும் நம்பிக்கை வைக்கும் எவரையேனும் கண்டறிய நீங்கள் விரும்பலாம். பின்பு, உங்கள் பலங்களைக் கட்டி எழுப்புவதற்கும் உங்கள் குறைவுகளைத் திருத்துவதற்கும் உங்களையே ஒப்புக்கொடுங்கள்.*

*நாம் ஒவ்வொருவரும் நம்மையே, "வாழ்வின் யுத்தங்களுக்கு நான் தயாராய் இருக்கின்றேனா?"; "அந்த யுத்தங்களுக்கு என்னைத் தயார்ப் படுத்திக் கொள்வதற்கு நான் செய்ய வேண்டியவை யாவை?"; "அதற்கு எதை வேண்டுமென்றாலும் செலுத்த நான் தயாராய் இருக்கின்றேனா?" என்று கேட்டுக்கொள்வது அவசியமாய் இருக்கிறது.[10] அந்த அறைகூவல்களில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

---

*குறிப்புகள்*

*[1]இந்தக் கூற்றானது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம், டொமீஷியனின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியின்போது எழுதப்பட்டது என்று யூகிக்கிறது. [2]"வெளிப்படுத்தின விசேஷம் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஏழு உண்மைகள்" என்ற அறிமுகப்பாடத்தில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது "அன்று இருந்த ஏழு சபைகளுக்கு" தொடக்கத்தில் எழுதப்பட்டது என்று நான் வலியுறுத்தியிருந்தேன். இந்த ஏழு சபைகளும் யோவானின் நாட்களில் இருந்த உண்மையான சபைக்குழுமங்கள் என்றும் இவைகள் "சபையின் ஏழு யுகங்களை" குறிப்பதில்லை என்றும் நான் மீண்டும் வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். [3]இதற்கு ஒரு விதிவிலக்கை நாம் காணுகின்றோம்: லவோதிக்கேயாவுக்கு எழுதப்பட்ட கடிதம் மாத்திரம் அதிகாரம் 1ல் இருந்து சொல் விளக்கம் ஒன்றைக் கடனாகப் பெறுகிறது (1:5; 3:14). [4]வாக்குத்தத்தங்களில் சிலவற்றிற்கும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் எஞ்சிய பகுதிக்கும் உள்ள தொடர்பு தெளிவானதாக உள்ளது; மற்ற தொடர்புகள் கொஞ்சமே தெளிவாக உள்ளன. ஒவ்வொரு கடிதத்தைப் பற்றியும் நாம் படிக்கும்போது, பெரும்பாலான தொடர்புகள் சுட்டிக்காண்பிக்கப்படும். [5]உதாரணம் என்ற வகையில் யோசுவா*

*7:1-26ஐக் காணவும்.* [6]*இந்த ஏழு கூறுகளும் ஒரே விதமான எழுத்தைக் கொண்டு தொடங்கும்படி மாற்றித் தலைப்பிடப்பட முடியும். எடுத்துக்காட்டாக,* The Commission (“To the angel ...”), The Character (the description of Jesus), The Commendation, The Condemnation, The Correction (the warning), The Call (“hear what the Spirit says”), and The Challenge (“to him who overcomes”). *எனது அனுபவத்தில், இவை யாவும் ஒரே எழுத்தைக் கொண்டு தொடங்காததாயிருக்கும்போது, இவைகள் நினைவுகூருவதற்குச் சுலபமானவைகளாக உள்ளன.* [7]Harold Hazelip, *The Lord Reigns: A Survey of the Book of Revelation* (Abilene, Tex.: Herald of Truth, n.d.), 5. [8]Ibid., 5, 6 (references added). [9]Ibid., 6. [10]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், கிறிஸ்தவரல்லாதவர்கள் ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் இயேசுவில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துவது அவசியம் என்று அவர்களுக்குக் கூறப்பட வேண்டும் (நடபடிகள் 2:36-38).*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

*1. கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரத்தின்படி, ஏழு கடிதங்களும் எப்போதுமே வெளிப்படுத்தின விசேஷத்தின் பாகமாக இருந்துள்ளனவா?*

*2. இந்தப் பாடத்தின்படி, இந்தக் கடிதங்கள் கொண்டுள்ள மூன்று நோக்கங்கள் யாவை? சாத்தியமான மற்ற நோக்கங்கள் எவற்றையாவது உங்களால் நினைக்க முடிகிறதா? இதன் அடிப்படை நோக்கம் என்னவாக இருந்தது?*

*3. இந்தக் கடிதங்கள் “மூவழிக் கவனக்குவிப்பைக் கொண்டுள்ளன” என்று இந்தப் பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அர்த்தப் படுத்துவது என்ன?*

*4. சபைகள் தங்கள் பலங்களில் உறுதிப்படுத்தப்பட வேண்டும், தங்கள் பலவீனங்களில் திருத்தப்பட வேண்டும், தங்கள் பயங்களில் ஆறுதல் படுத்தப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார் என்பதாக இந்தப் பாடத்தில் கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டும் என்று கர்த்தர் கூறியுள்ளவற்றுடன் எவ்வாறு ஒப்பிடப் படுகிறது என்பது பற்றிக் கலந்துரையாடவும் (2 தீமோத்தேயு 4:2).*

*5. இந்தக் கடிதங்களின் ஏழு கூறுகள் யாவை?*

*6. வரைவட்டவணையை உங்களால் நிரப்ப முடிந்ததா? நிரப்பப்பட்ட உங்கள் வரைவட்டவணையை பிறர் நிரப்பியுள்ள வரைவட்டவணை களுடன் முடிந்தால் ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

*7. ஏழு சபைக்குழுமங்கள் ஒவ்வொன்றின் சூழ்நிலையையும் தொகுத் துரைப்பதற்கு ஹெரால்டு ஹேசெலிப் அவர்கள் கருத்தாகத் தெரிவித்த திறவுகோல் வார்த்தைகள் யாவை?*

*8. உங்கள் பலங்களையும் பலவீனங்களையும் கண்டறிவதற்கு உங்களைச் சுயபரிசோதனை செய்துகொள்ள நீங்கள் நேரம்*

*எடுத்துக் கொண்டீர்களா? இந்த மதிப்பீட்டில் உங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா?*